# ஒரு மேய்ப்பனான அரசன் தேவனைப் பற்றி பாடல் பாடினான்

சிறுவர்களின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்க

**ஜெபம் :** "அன்பான கர்த்தாவே, வேதாகமத்தில் உள்ள கவிதைகளின் அழகைப் பாராட்டவும், தாவீதின் மேய்ப்பனின் பாடல்களால் தேற்றப்படவும் பிள்ளைகளுக்கு உதவும்."

ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ மேய்ப்பனின் சங்கீதத்தை (சங். 23) வாசிக்கவும். தேவன் நம்மை அற்புதமாக கவனித்துக் கொள்வதற்காக தாவீது செய்தது போல, நமது நல்ல மேய்ப்பனாகிய இயேசுவை எவ்விதம் போற்ற வேண்டும் என்று அது காட்டுகிறது.



**கேள்விகள்**

- தேவன் நம்மீது அக்கறை எடுத்துக் கொள்ளும்போது நமக்கு ஏதாவது குறைபடுகிறதா? *(வச.1)*
- எப்படிப்பட்ட இடங்களுக்கு அவர் நம்மை வழிநடத்துகிறார்? *(வச. 2)*
- நம்மை அவர் ஏன் நீதியின் பாதைகளில் நடத்துகிறார்? *(வச. 3)*
- நாம் மரணத்துக்குப் பயப்பட வேண்டுமா? *(வச. 4)*
- எங்கே நாம் நித்தியமாக வாழ்வோம்? *(வச. 6)*

மேய்ப்பனின் சங்கீதத்தைப் பாடவும். இந்த வார்த்தைகளைக் கொண்ட பாடல் இருந்தால் பாடவும். அல்லது ஏற்கெனவே அறிந்த அல்லது பிள்ளைகள் உண்டாக்கும் இராகத்துக்கு ஏற்ப இதைப் பாடலாம்.

**இந்த சங்கீதத்தைப் பாடும்போதே நடிக்கவும் செய்யலாம்.**

- இந்த சிறு நாடகத்தைப் பிள்ளைகள் அரங்கேற்ற சபைத் தலைவரோடு பேசி ஏற்பாடு செய்யவும்.
- இந்த நாடகத்தை ஆயத்தம் செய்ய உங்கள் போதனை நேரத்தை பயன்படுத்துக

- பெரிய பிள்ளைகள் சிறுவர்களுக்கு உதவி செய்யவும்
- பெரிய பிள்ளைகளும் பெரியவர்களும் இந்த பாத்திரங்களை ஏற்கலாம்

**மேய்ப்பன் :** பாத்திரம், பாட்டில், மேசை, மேய்ப்பனின் தடி (கீழே இருக்கும் படத்தைப் பார்க்க, வளைந்த எந்த தடியையும் பயன்படுத்தலாம்)

**கதை கூறுபவர் :** கதை சுருக்கம் கூறி, பிள்ளைகள் செய்ய வேண்டியதையும் கூற வேண்டியதையும் ஞாபகப்படுத்தவும்.

**சிறுவர்கள்,** எதிரிகள், ஆடுகள், ஆகிய பாத்திரங்களை ஏற்கலாம் (கை, முழங்கால் ஊன்றி தவழ்ந்து, அவ்வப்போது மெதுவாக “மே” என்று கத்துதல்)

**கதை கூறுபவர் :** சங்கீதம் 23 ஐ மனப்பாடமாக இருதடவை பாடலாம் அல்லது வாசிக்கலாம். இரண்டாவது தடவை ஒவ்வொரு வசனத்தையும் கூறி நிறுத்தவும். சிறுவர்கள் நடிப்பார்கள்

**கதை கூறுபவர் :** (வசனம் 1)

**மேய்ப்பன் :** ஆடுகளை சுற்றி நடந்து தடவிக் கொடுத்தல்

**ஆடுகள் :** மேய்ப்பனுக்கு அருகில் சென்று, தாங்கள் மகிழ்ச்சியாய் இருப்பதைக் காட்ட சிரித்தல்

**கதை கூறுபவர் :** (வசனம் 2)

**மேய்ப்பன் :** பாத்திரத்தைக் கீழே வைத்து, ஆடுகளை அதற்கு நேராக அழைத்து செல்லுதல்

**ஆடுகள் :** குடிப்பதாக நடித்து, அமைதியாகப் படுத்து, அசை போடுதல்

**கதை கூறுபவர் :** (வசனம் 3)

**மேய்ப்பன் :** ஆடுகளை கரம் நீட்டி அழைத்து நடக்கவும்

**ஆடுகள் :** மேய்ப்பனைப் பின் தொடர்ந்து நடத்தல்

**கதை கூறுபவர் :** (வசனம் 4)

**எதிரிகள் :** நாற்காலியின் மறைவில் அமர்ந்து ஆடுகளை அம்பால் எய்வது போல் காட்டுதல்

**ஆடுகள் :** பயந்து, “மே” என்று கத்தி வட்டமாக ஓடுதல்

**மேய்ப்பன் :** தடியைக் கொண்டு ஆடுகளை எதிரிகளிடம் இருந்து தூரமாய் ஒட்டி அமைதிப்படுத்தி, எதிரிகளை விரட்டுதல்

**கதை கூறுபவர் :** (வசனம் 5)

**மேய்ப்பன் :** குப்பியில் இருந்து தைலத்தை கொட்டுவது போல பாவித்தல்

**ஆடுகள் :** கைகளை தலைமேல் மெதுவாக உயர்த்தி பாத்திரம் நிரம்பி வழிவது போல் நடித்தல்

**கதை கூறுபவர் :** (வசனம் 6)

**மேய்ப்பன் :** கதவைத் திறந்து உள்ளே ஆடுகளை வரவேற்பது போல் நடித்தல்

**ஆடுகள் :** கதவு வழியே உள் நுழைந்து, மேய்ப்பனை சுற்றி முழங்காலிட்டு, கைகளை பரலோகத்துக்கு நேராய் விரித்து தேவனைத் துதித்தல்

**கதை கூறுபவர் :** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுதல்

**கேள்விகள் :** குழந்தைகள் இதை பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் மேலே பட்டியலில் இடப்பட்டுள்ள கேள்விகளைக் கேட்கவும். தேவன் தமது மந்தையை எவ்வாறு மேயக்கிறார் என்பதற்கு குழந்தைகளும் பெரியவர்களும் வேறு உதாரணம் தரட்டும்.

**மேய்ப்பனின் கோலைப் படமாக வரைக:** குழந்தைகள் தாங்கள் வரைந்த படத்தை ஆராதனையின் போது பெரியவர்களுக்குக் காட்டி, நல்ல மேய்ப்பனான இயேசு நம்மை எப்போதும் நல் வாழ்க்கைக்கு நேராய் வழிநடத்துகிறார் என்பதை மேய்ப்பனின் கோல் காட்டுகிறது என்று விளக்கவும்.



**பெரிய பிள்ளைகள்** நமது நல்ல மேய்ப்பனாகிய இயேசுவைப் பற்றி கவிதை அல்லது பாடல்கள் எழுதட்டும்

சங்.23 ல் இருந்து பிள்ளைகள் வசனத்தை ராகத்தோடு பாடட்டும்.

**மனன வசனம் :** பெரிய பிள்ளைகள் சங். 23; சிறிய பிள்ளைகள் சங்.23:1-2.

**ஜெபம் :** "அன்பான இயேசுவே, நீர் எங்களது அற்புதமான மேய்ப்பர். எங்களுக்கு வேண்டியதை நீர் தருகிறீர். அபாயத்தின் போது, எதிரிகள் எதிர்கொள்ளும் போது, மரணம் எதிர்வரும் போது நாங்கள் உம்மையே நம்புகிறோம். நீர் எங்களைத் தேற்றுகிறீர். வழிநடத்துகிறீர், மரணத்தின் வழியாக பரலோகத்திற்கு உம்மோடு நித்தியமாக வாழ்ந்திருக்க கர்த்தராகிய இயேசுவே, சீக்கிரம் வாருமையா."

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net